மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் திருச்சி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் வரும்போது அங்கே கூட இதைக் கேட்டுக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழ்நாட்டில் மொத்தம் 4½ இலட்சம் விவசாயிகள் பம்ப்செட் இணைப்பு கேட்டு மனு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 50,000 என்ற அளவில் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 79 ஆம் ஆண்டு 80 ஆம் ஆண்டு வரையில் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நிச்சயமாக விரைவாக மின்னிணைப்பு தருவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, இந்த மின்சாரத்திற்குப் பணம் கட்டுவதில் ஒரு சிரமம் இருக்கிறது. ஏற்கெனவே தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 5 ஏக்கருக்குக் கீழே உள்ளவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். அது போகட்டும். ஆனால் கிணற்றிலே தண்ணீர் இல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்பதால் இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன். 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே பம்ப்செட்டை வீட்டிலே கொண்டுபோய் போட்ட பிறகும் கூட இலாக்காவினர் ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று வசூல் செய்து இருக்கிறார்கள். இந்தக் கொடுமையை.. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பொன்னம்மாள் அவர்கள் கவனிக்க வேண்டும். இதே கேள்வி இதே அவையில் எழுப்பப்பட்டு விடை சொல்லப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் அவைக் குறிப்புகளைத் திருப்பிப் பார்க்கவேண்டும்.

மங்கலம் கிராமத்தில் மின்நிலையம்.

90 (*வினா எண். 2103) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்காண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள மங்கலம் கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே,

1989 ஏப்ரல் 20]

(அ) ஆம்

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள மங்கலம் கிராமத்தில் ஒரு 110/33-11 கேவி (KV) துணை மின்நிலையத்தை நிறுவுவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. இத்துணை மின்நிலையத்தில் 16 மெகா வோல்ட் ஆம்பியர், 110/33 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும், 16 மெகா வோல்ட் ஆம்பியர், 110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும் நிறுவப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அந்த மின் நிலையம் அமைக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். நன்றி. எங்களுடைய பகுதியில் இப்போது கடுமையான மின்தட்டுப்பாடு இருக்கிறது. பயிர்கள் எல்லாம் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலே இப்படிப்பட்ட மின் நிலையங்கள் அமைத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். எனவே இதை விரைவு படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள மங்கலம் என்ற கிராமத்தில் சர்வே எண். 173-ல் உள்ள அரசுப் புறம்போக்கு நிலமான 6.02 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலவுடைமை மாற்றம் செய்து தர இயலாது என்றும் அதனைக் குத்தகை அடிப்படையில் தர இயலும் என்றும் வருவாய்த் துறையினரால் கூறப்பட்டதால் இந்த நிலத்தைப் பெற ஆகஸ்ட் 1987-ல் செயற்குறிப்பு வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டது. இத்தகைய துணை மின் நிலையங்களில் நிரந்தரமான கட்டமைப்புக்களும், கட்டடங்களும் மின்சார வாரியத்தால் அமைக்க வேண்டி இருப்பதால் துணை மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் அரசுப் புறம்போக்கு நிலத்தைக் குத்தகை அடிப்படையில் நில உடைமை மாற்றம் செய்து தரும்படி மின்சார வாரியம் அரசைக் கேட்டுக்கொண்டது அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலவுடமை மாற்றம் செய்து தரலாம் என்று அரசு தெரிவித்திருக்கிற காரணத்தால் விரைவாக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இதை நிறுவுவதற்குண்டான அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தொடர்பாக உங்களுடைய அனுமதியோடு மின்சாரத்தைப் பற்றி நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பகுதியிலே மின்சாரம் ஒரு வார காலமாக வரவில்லை.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கலசப்பாக்கம் வரையில் வரலாம். (சிரிப்பு) வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

அரியலூர் நிர்மலா காந்தி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அப்பள்ளி பணிப்பெண் ஒருவர் கொலை செய்யப்பெற்று தூக்கிலிடப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் '12.4.89 அன்று திருச்சிமாவட்டம் அரியலூரில் நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளரான நிர்மலா ராணி என்ற 16 வயது இளம்பெண் பள்ளி அறையிலேயே தூக்கில் தொங்கும் நிலையிலும், தரையில் கால்கள் ஊன்றிய நிலையிலும் இருந்தது பற்றிய சம்பவத்தால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட நிலை குறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'. என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அவமானங்கள், கொடுமைகள் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான் இது. அந்த இளம்பெண் 16வயது பெண். அப்படி தூக்கிட்ட நிலையில் இருந்திருக்கின்றாள். நம்முடைய மருத்துவ நிபுணர்கள் சோதனையிட்டபோது அந்தப்பெண் கருக்கலைக்கப்பட்டு ரத்தப்போக்கினால், ரத்தப் போக்கு அதிகரித்திருக்கலாம் என்றும் பிறகு அவர்கள் கொண்டு போய் தூக்கு மாட்டியிருக்கலாம் என்றும் கருத்து நிலவுகிறது.

அதுபோலவே இந்தப் பகுதியில் இந்தச் சம்பவம் மட்டுமல்ல, 3 மாதங்களுக்கு முன்னால் இதைப்போல் இரண்டு பெண்கள் ரெயில்வே கேட்டின் அருகில், இதே மாதிரி கால் ஊன்றிய நிலையில் சாகடிக்கப்பட்டு தூக்கு மாட்டப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அதுபோலவே, இளம்பெண்கள் இளம் விதவைகள் இது போன்று வறுமையின் காரணமாகப் பணிகளில் அமரும்போது அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க இன்றைய அரசாங்கமாவது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.